**செய்தி வெளியீடு எண்: 616** **நாள் : 15/10/2012**

## 'பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதுடன்; நிருவாகத்தின் முதுகெலும்பாய்த் திகழும் வருவாய்த்துறை'

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா

**மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வருவாய்த் துறையின் செயல்பாடுகள் குறித்து வருவாய் கோட்ட அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம்**

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை எளிய மக்கள் நிரந்தர ஏற்றம் பெற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கமதைத் தாரக மந்திரமாய்க் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல பல திட்டங்களை, நாளும் செல்படுத்தி வருகிறார்கள். வருவாய்த் துறையின் சார்பில் செம்மையோடு செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து 16 மாவட்டங்களைச் சார்ந்த வருவாய் கோட்டாட்சியர்கள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வருவாய்த்துறை 'தோப்பு' என்.டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில், எழிலகம் வருவாய் நிருவாக கருத்தரங்கக் கூடத்தில் இன்று (15.10.2012) நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ள நடைமுறைகள் எளிமை படுத்தப்பட்ட புதிய விரைவுப் பட்டா மாறுதல் திட்டம், இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குதல், பெண்களை பெரிதும் கவர்ந்துள்ள விலையில்லா மிக்சி, மின்விசிறி மற்றும் கிரைண்டர் வழங்கிடும் திட்டம், 6ஆம் வகுப்பு முதல் பயிலும் மாணவ மாணவியர்களுக்குத் தேவையான அனைத்துச் சான்றிதழ்களையும் தாம் பயிலும் பள்ளியிலேயே வழங்குதல், முதியோருக்கான ஒய்வூதியத் தொகையினை விரைந்து வழங்குதல் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உழவர் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் தற்போது வரவிருக்கும் தென்மேற்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் ஆகிவை குறித்து, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், அரியலூர், பெரம்பலூர், சேலம், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 16 மாவட்டங்களின் வருவாய் கோட்ட அளவிலான, விரிவான ஆய்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமை உரையில், 'அரசின் நலத்திட்டங்களை செயல்படுத்துவதிலும் கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது, மக்களை நாடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் வருவாய்த்துறை முக்கியப் பங்காற்றுவதுடன், நிருவாகத்தின் முதுகெலும்பாக தொடர்ந்து விளங்கி வருகிறது.' மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் வருவாய்த்துறை பற்றி பெருமையோடு குறிப்பிட்டுள்ளார்கள்.

இப்படி பல்வேறு பெருமைகளையும், பாரம்பரியமும் மிக்க வருவாய்த் துறையின் அமைச்சராக பணியாற்றிட அனுமதி அளித்துள்ளமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், வருவாய்த் துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களான, புதிய வருவாய் வட்டங்கள், ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகங்கள், வருவாய் கோட்டம் மற்றும் வருவாய் வட்ட அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள், பணிகளை விரைவாக செய்திட, நாட்டிலேயே முதன் முறையாக, கிராம நிருவாக அலுவர்களுக்கு மடிக்கணினிகள், அலுவலகங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான புதிய பணியிடங்கள், கணினிகள், புதிய வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உருவாக்கித்

தந்த வண்ணம் உள்ளார்கள். கடந்த 12 ஆம் தேதியன்று வருவாய்த் துறைக்கான விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 1,705.95 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட பணிகளான, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம், நிருவாகத் திறனை மேம்படுத்திட, மக்கள் தொகை அடிப்படையிலான திருவண்ணாமலை மாவட்டம் – கலசப்பாக்கம் வட்டம், நாமக்கல் மாவட்டம் – கொல்லிமலை வட்டம், விழுப்புரம் மாவட்டம் சின்ன சேலம் வட்டம், சிவகங்கை மாவட்டம் – திருப்புவனம் வட்டம் ஆகிய 4 புதிய வருவாய் வட்டங்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 107 புதிய வருவாய் கிராமங்கள், அகத்தீஸ்வரம் வட்டத்திற்கு புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம், ஆகியவற்றை தொடங்கி வைத்து, காஞ்சிபுரம் மாவட்டம் சோழிங்கநல்லூர் வட்டத்தில் 7 கிராமங்களில் நில அளவைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 221 ஏக்கர் பரப்பளவு கொண்ட 5229 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் 30 மாவட்டங்களைச் சார்ந்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 124 புதிய வாகனங்களையும் வழங்கியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வருவாய்த்துறையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மேலும், நமது துறையின் சார்பில் வைக்கப்படும் கோரிக்கைகளை உடனடியாக பரிசீலனை செய்து முடிவுகளை விரைந்து அறிவிப்பதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நிகரில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நமது வருவாய்த் துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களும் அது உரிய மக்களை; உரிய நேரத்தில் சென்றடைந்திட வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளதோடு மட்டுமின்றி, திட்டங்களை நடைமுறைபடுத்திடும் போது ஏற்படும் இடர்பாடுகளைக் கேட்டறிந்து, அவைகளை உடனடியாக களைந்திட, உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும் இயற்கை பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற் கொள்வதோடு, பாதிக்கப்பட்டோருக்கான உடனடி நிவாரண உதவிகளை விரைந்து அளித்திட வேண்டும். இதனை நாம் அனைவரும் கருத்தில் கொண்டு பணியாற்றி, இந்த வருவாய்த்துறைக்கு பெருமையைச் சேர்த்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு. ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / நிலநிருவாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் (பொ) திரு. யத்தீந்திர நாத் ஸ்வேன் இ.ஆ.ப., நில சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன் இ.ஆப., நிலசீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ. சந்திரகுமார் இ.ஆ.ப., மற்றும் வருவாய் நிருவாக இணை ஆணையர் முனைவர் மு.ஜெயராமன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9